
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | அக்டோபர் 1993 | இதழ் 10



வெளியிடுவோர் :

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

## ஊழியர்களுக்கு ஓர் இனிய செய்தி

தங்களுடைய பிராந்திய சபைகளில் பயன்படுத்தவும், ஊழியங்களுக்குச் செல்லுகின்ற இடங்களில் உபயோகிக்கவும் ''திருமறை ஆசான்'' பிரதிகள் அதிகமாக அனுப்பும்படி, அநேகர் கேட்டுக் கொண்டீர்கள். தற்போது அதற்குண்டான வாய்ப்பை கர்த்தர் நல்கியிருக்கிறார். உங்கள் ஜெபங்களுக்கு நன்றி.

எவ்வளவு பிரதிகள் தேவைப்படும் என்பதை உடனடியாக தெரிவிக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி ஆசிரியர்

## இதழின் உள்ளே


1. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன் 1
2. இயேசு கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார் 7
3. நல்ல தாயார் 11
4. கிறிஸ்துவின் சபையைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில காரியங்கள் 15
5. என்றும் மாறாத கிறிஸ்து 18
6. நற்செய்தியைப் போதிப்போம் 20
7. இயேசு கிறிஸ்துவின் வாய்மொழிகளும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் வாசகங்களும் 21
8. பெண்கள் சபையில் போதிக்கலாமா? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 OCTOBER—1993 Issue 10


**ஆசிரியவுரை**

# தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்

மத்தேயு எழுதின சுவிசேஷம் பத்தொன்பதாம் அதிகாரம் ஆறாம் வசனம். வேதாகமத்திலுள்ள மிகப் பிரபலமான வசனங்களில் ஒன்று. பிதாவாகிய தேவனால் ஏற்படுத்தப்பட்ட திருமணத்தின் மேன்மையை நிலைநாட்டும்படியாக நமதாண்டவர் சொன்ன வார்த்தை இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ திருமணங்கள் வருடந்தோறும் நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அத்திருமண வைபவங்களில் பங்கு பெறுகின்றனர். எல்லா திருமணங்களிலும் தவறாமல் பயன்படுத்தப்படும் வசனம்தான். **''ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்ககடவன்'**, என்பது. ஆம் சிருஷ்டி கர்த்தாவால் ஒழுங்கு செய்யப்பட்ட மகிழ்ச்சி பொங்கும் இந்த உறவு ஓர் நிலைத்த உறவாக மனிதனால், அவனுடைய சின்ன புத்தியால் பிரிக்கப்படாத ஓர் உறவாக இருக்க வேண்டுமென்ற தன் விருப்பத்தைதான் இந்த வசனத்தின் மூலம் கிறிஸ்துவானவர் வெளிப்படுத் யுள்ளார்.

1கொரி 9:9-ல் ''போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக'' என்று எழுதியிருப்பதை நாம் காணலாம். அது மாத்திரமல்ல அதே வசனத்தின் பிற்பகுதியில் **தேவன் மாடுகளுக்காகவே**

கவலையாயிருக்கிறாரோ என்ற ஒரு கேள்வியையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

தேவன் மாடுகளுக்காகக் கவலைப்படாமல் இல்லை. கவலைப் பட்டே இவ்வசனத்தைச் சொல்லியுள்ளார். ஆனால் இவ்வசனத்தி- லுள்ள கேள்விக்குறியின் நோக்கம் மறைந்திருக்கும் சில பேருண்- மைகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான்.

வேலையாள் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்பது இப்பகுதியில் மறைந்துள்ள ஓர் உண்மை. மாத்திரம் அல்ல, சுவிசேஷ வேலையைச் செய்கிறவர்கள் இதன் மூலம் பிழைப்பூட்டப் பட வேண்டுமென்பதும், இக்கேள்விக்குறியின் பிரதான நோக்கங் களில் ஒன்று.

1கொரி 9:9 எவ்வாறு நேரிடையான பொருள்களுக்கும் மேலான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவுகிறதோ அதைப் போலவே மத் 19:6 ல் இருந்தும் நாம் நம்முடைய மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான சில ஆவிக்குரிய பாடங்- களைக் கற்றுக் கொள்ள முடியும்.

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக் கூடாதென்பது அவருடைய விருப்பம். திருமணத்தின் மூலம் ஆணையும், பெண்ணை யும் இணைத்த தேவன் வேறு சிலவற்றையும் இணைத்துவைத்துள்- ளார். அவைகளைப் பிரிக்கக் கூடிய அதிகாரம் எந்த மனிதனுக்கும் கிடையாது. அப்படிப் பிரிப்பது தேவனுடைய ஆலோசனையை, கட்டளையை மீறுவதாகும்.

இப்பொழுது தேவன் இணைத்துள்ள சிலவற்றைக் காண்- போம்.

**1. கிறிஸ்துவும், சபையும்,**

இன்றைக்குப் பெரும்பாலான பிரிவினை சபைக் கூட்டத்தார்- களும், கிறிஸ்துவ மதத் தலைவர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துப் பல பட்டங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்கிற வர்களும், போதிக்கும் ஒரு விநோத கொள்கை இரட்சிப்புக்கும், சபைக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்பது. அப்போஸ் தலர் 20:28 ம் வசனம் இயேசு தமது சுய இரத்தத்தைச் சிந்தி சபையைச் சம்பாதித்தார் என்று சொல்கிறது. அதாவது அவர் தன் இன்னுயிரைக் கொடுத்ததே சபைக்காகத்தான்.

''..... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' (அப் 2:47) என்றும் காண்கிறோம்.

வசனங்கள் இவ்வாறாகச் சொல்லும் போது கிறிஸ்துதான் முக்கியம், சபை முக்கியமல்ல என்பது பேதமையைத்தானே காட்டுகிறது.

எபேசியருக்கு எழுதின நிருபம் 5-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவை அடிப்படையாக வைத்து கணவன் மனைவி உறவு விவரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் கணவன், மனைவி இடையே இருக்கும் நெருக்கம் தான் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள நெருக்கமாகும். மேற்கண்ட அதிகாரத்தின் கடைசிப்பகுதி மீட்பின் திட்டத்தில் கிறிஸ்துவும், சபையும் பின்னி பிணைந்து இருக்கிறார்கள் என்பதை எளிய நடையில் எடுத்துரைக்கிறது. இதைப் புரிந்து கொள்வதில் யாருக்கும் சிரமம் இருக்காது என நம்புகிறேன்.

கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவை விளங்கிக் கொள்வதில் இன்னும் சிரமம் இருந்தால் இந்த வசனங்களைக் கூர்ந்து கவனியுங்கள். அப் 8:1ல் அந்நாட்களில் சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று என்று காண்கிறோம். சபையைத் துன்பப்படுத்தின கலகக் கும்பலுக்கு சவுல் தலைமை ஏற்கிறார். அப்படி சபையை துன்பப்படுத்தினசவுலைஇயேசு தமஸ்கு செல்லும்நெடுஞ்சாலையில் சந்தித்துச் சொல்வதைக் கேளுங்கள். ''சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்''. (அப் 9:4) என்றார். ''..நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே..'' (அப 9:5) சவுல் இயேசுக் கிறிஸ்துவை ஒன்றுமே செய்யவில்லை. கிறிஸ்துவை அவர் ஒரு போதும் துன்பப்படுத்தவில்லை. அவன் துன்பப்படுத்தினதோ சபையைத்தான். ஆனாலும் கிறிஸ்து சவுலைப் பார்த்துக் கேட்பது என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய், நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே என்பது தான். கிறிஸ்துவும் சபையும் ஒன்று என்பது தான் இதன் பொருள். கிறிஸ்துவும் சபையும் பிரிக்க முடியாதவர்கள் என்பதை இதைவிடத் தெளிவாக எப்படிக் கூற முடியும்.

ஆனால் இன்றைக்கு வரம் பெற்றவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்கிறவர்கள் கூட சபை முக்கியமல்ல கிறிஸ்துதான் முக்கியம் என்கின்றனர். கிறிஸ்து தேவை என்கிறவர்கள் அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். இல்லையேல் பயனில்லை. ஆகையால் ''தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்.''

2. விசுவாசமும், ஞானஸ்நானம் :-

தேவனுடைய திட்டத்தை மீறுவதையே தங்கள் தொழிலாக கொண்டிருக்கும் அநேக பிரசங்கிமார்கள் விசுவாசத்தையும் ஞானஸ்நானத்தையும் கூட பிரித்து விடுகிறார்கள் ''விசுவாசமுள்ளவனாகிஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என வேதம் சொல்கிறது. (மாற்கு 16:16) நேர்மையோடும் மனத்தாழ்மையோடும் வேதத்தை வாசிக்கும் எந்த ஒரு மனிதனும் இந்தக் கட்டளையைப் புரிந்து ஏற்றுக் கொள்வதில் சிரமம் இருக்காது. ஆனால் இதைக் கூடத் தவறாகப் போதித்து மக்களை குழப்பி விடுகின்றனர் பலர். விசுவாசித்த உடனேயே இரட்சிப்பைக் பெற்றுக் கொள்ள முடியும் என்பது இன்று அநேகருடைய போதனை. ஞானஸ்நானம் இல்லாமலே இரட்சிப்பு சாத்தியமெனில் ஞானஸ்நானம் அவசியமில்லாத ஒன்றுதானே. ஞானஸ்நானம் என்ன ஓர் அர்த்தமில்லாத சடங்கா? அல்லது அவசியமில்லாத ஒன்றைத்தான் மாற்கு 16:16 நமக்குப் போதிக்கிறதா? ப.ஆ தெளிவில்லாத உபதேசத்தைதான் நமக்கு அருளியிருக்கிறாரா? இல்லை, இல்லவே இல்லை நம்முடைய கர்த்தர் இரட்சிப்புக்கு முன்னதாகவே விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் இணைத்து வைத்துள்ளார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் தான் இரட்சிக்கப்படுவான். சந்தேகமோ, குழப்பமோ வேண்டாம்.

மாற்கு 16:16 ன் படி குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஞானஸ்நானம் எவ்வளவு புத்தியீனம் என்பதை நாம் அறியமுடியும். விசுவாசத்தை ஞானஸ்நானத்தோடு இணைத்திருக்கும் போது விசுவாசிக்க முடியாத குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி சரியாகும்? உலகக் கல்வியில் தேர்ந்து அறிவு பெருத்தவர்கள் கூட இந்த தவறை எங்ஙனம் செய்ய முடிகிறது? குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரி என்று வேதாகமம் எங்கும் தேடினும் சான்று கிட்டாது. தேவன் கொடுத்துள்ள அறிவை வைத்து கொண்டு தேவ கட்டளையை மீற வேண்டாம்.

தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அருளுகிறார் கிறிஸ்து (எபி 5:9) நாம் கர்த்தரை நேசிப்போமானால் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். வசனத்திற்குக் கீழ்ப்படிகிறயாவருக்கும் நித்திய இரட்சிப்பு உண்டு. அந்த நித்திய இரட்சிப்புக்குப் பங்காளிகளாக மாறவேண்டுமெனில் தேவன் இணைத்த விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்.

3. ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்தல் :

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளு-

கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவான் 4:24) இப்படித்தான் ஆராதிக்க வேண்டுமென்று வேதாகமம் வரையறுத்துச் சொல்லும் பொழுது, இன்று அநேகர் "தேவனை எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம் என நினைக்கின்றனர். நினைத்தபடியெல்லாம் ஆராதிப்பதை நினைவும், உணர்வுமற்ற விக்கிரகங்கள் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒன்றான மெய் தேவனாகிய யெகோவா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஆவியோடு துதித்தல் என்பது நியாமான, நேர்மையான மனநிலையைக் குறிக்கிறது. நன்றியறிதலோடு கூடிய உணர்வுகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும். பக்தி மாத்திரமல்ல பயமும் அவருடைய சமூகத்தில் சேரும் பொழுது இருக்க வேண்டும். தேவ சமூகத்தில் சேரும் பொழுது ஒருவன் எப்படி இருக்க வேண்டுமென்பதை சங்கீதக்காரன் விவரிக்கும் விதத்தைப் பாருங்கள். "தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்" (சங் 89:7) நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால் படியிடக் கடவோம் வாருங்கள். (சங் 95:6)

இன்று தேவனை ஆராதிப்போரில் அநேகர் பயபக்தியோடு, ஆவியோடு அவருடைய சமூகத்தில் வருவதில் பெரும்பாலும் தவறிழைப்பதில்லை, ஆனால் கூடி வருகிறவர்கள் "உண்மையோடு ஆராதிக்கிறார்களா என்று கவனித்தால் வேதனைப்படுதலைத் தவிர வேறுவழியே இல்லை. ஆம் "ஆவியோடும், உண்மையோடும்" என்பதை மனிதன் பிரித்துவிட்டான்.

உண்மையோடு ஆராதிப்பதென்பது சத்தியத்தோடு ஆராதிப்பதாகும் தேவனுடைய வார்த்தைகள்தான் சத்தியம் (யோவான் 17:17) இன்றைக்கு ஆராதனைகள் வசனத்தை ஆதாரமாக வைத்து நடத்தப்படுகிறதா? பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாக வைத்து ஏறெடுக்கப்படுகிறதா? சிந்திக்க வேண்டிய கட்டத்தில் உள்ளோம்,

உதாரணமாக, இசைக்கருவிகளோடு தேவனை ஆராதிக்க வேண்டுமென்று புதிய ஏற்பாடு எங்காவது வலியுறுத்துகிறதா? இல்லைதானே. ஆனால் அதே புதிய ஏற்பாடு தேவனை துதிக்கும் பொழுது எப்படிப்பாட வேண்டுமென்று கொடுக்கும் வசன ஆதாரங்களைப் பாருங்கள் (கொலோ 3:16-17; I கொரி 14:15)

கட்டளையிடப்படாத ஒன்றை நாமாகவே **சேர்த்து ஆவியிலி-ருந்து உண்மையைப்** பிரித்து விட்டோம்.

வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும்பொழுது கர்த்தருடைய பந்தியிலே கலந்து கொள்ள வேண்டுமென்று வேதாகமத்தில் நாம் காண்கிறோம். (அப் 20:7) புரிந்து கொள்ளக் கூடிய நடையில்தான் சொல்லப்பட்டுள்ளது ஆனால் இன்றைக்கு எத்தனை ஆராதனைகளில் வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தரின் பந்தி கடைப்பிடிக்கப்படுகிறது? மிகச் சொற்பமே. இங்கே சொல்லப்-பட்டிருக்கின்ற கட்டளையை **கழிப்பதன்** மூலம் நாம் **ஆவியி-லிருந்து உண்மையைப் பிரித்து விட்டோம்.**

ஒரு புறம் இசைக்கருவிகளை ஆராதனையில் **சேர்த்து** தேவனுடைய வார்த்தையை அவமாக்கினோம். இங்கே கர்த்தருடைய பந்தியை ஆராதனையில் இருந்து **எடுத்து** தேவனுடைய வார்த்தையை அவமாக்குகிறோம். ஆனால் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று தான் வசனம் நம்மை எச்சரிக்கிறது. (வெளி 22:18-19) எங்கெல்லாம் எச்சரிப்பு மீறப்படுகிறதோ அங்கு தண்டனை உறுதிதான். தேவனுடைய கரங்களிலிருந்து தண்டனையைப் பெற்றுக் கொள்ள விருப்பமா? (எபி 10:31)

தேவன், அவரை ஆராதிக்கும்போது ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று, இரண்டையும் இணைத்து வைத்துள்ளார். **ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.**

தேவ ஆலோசனைகளை அப்படியே ஏற்று, பரலோக பாக்கியத்தை நாமனைவரும் பெற்றுக் கொள்ள தேவன் அருள் புரிவாராக.

**E Z S. ராஜநாயகம்**

**பிள்ளைகளே! நீடித்து வாழ விருப்பமா?**

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்

உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.

எபேசியர் 6 : 1-3.

# "இயேசு கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார்"?

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவ்வப் பொழுது சிலர் நாள் குறித்துக் கொண்டேயுள்ளனர். அவருடைய வருகைக்கு எப்படி அடிக்கடி நாட்களை முன்குறிக்கிறார்களோ அப்படியே அடிக்கடி அவர்கள் தோற்றுப் போகவும் செய்கிறார்கள். எந்த ஒரு மனிதனுக்கும் அவருடைய வருகை குறித்தான தகவலை அவர் வெளிப்படுத்தவில்லையென்பதை, நாள் குறிக்கும் இந்த விந்தை மனிதர்கள் ஒரு போதும் கற்றுக் கொள்ளமாட்டார்களா?

ஒருவேளை, இயேசுகிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகைக்கான காலத்தை வெளிப்படுத்த வேண்டுமென விரும்பியிருந்தால், அவரால் அதைச் செய்திருக்க முடியும். தன்னை நேசிக்கும் அவருடைய பிள்ளைகள் வேதாகமத்தை சிரமப்பட்டுத் தேடி வேதாகமத்தில் மறைந்திருக்கும் தேதியை கண்டுபிடித்துக் கொள்ளட்டும் என்று உருவக மொழியில் வெளிப்படுத்தியிருக்க மாட்டார். அவர் அப்படிச் செய்யாதபடியால் கண்டிப்பாக அதற்கு சில காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் எப்போதும் அவருடைய பிள்ளைகள் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பது தான். கடைசி நிமிடம் வரை காத்திருந்து, இறுதி மணி வேளையில் மனந்திரும்பி கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாவது அவருடைய நோக்கமல்ல.

கர்த்தர் சீக்கிரம் வருகிறாரென்று அநேகர் கூறுகின்றனர். அதாவது நம்முடைய வாழ்நாள் காலத்திலேயே கட்டாயம் கிறிஸ்து வந்துவிடுவார் என அவர்கள் விளம்புகின்றனர். அப்படிச் சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம், உண்மையல்லாமலும் போகலாம். அப்போஸ்தலர்களும், ஆதித் திருச்சபை மக்களும் கர்த்தர் வெகு சீக்கிரத்தில் திரும்ப வருவார் என்றும், அவர்களுடைய வாழ்நாள் காலத்திலேயே வரலாம் என்றும் எதிர்பார்த்தனர். கிறிஸ்துவானவர் பிதாவினிடத்திற்கு திரும்பிச் சென்றதிலிருந்து சீக்கிரம் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறார் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. ஆனால் அவர் இன்னும் வரவில்லை. அவர் இன்னும் வரவில்லை என்பதால் அவர் வரப்போவதே இல்லை என்பது இதன் பொருள் அல்ல **நாம் எதிர் பார்க்கும் நேரத்தில் அல்ல அவர் குறித்த நேரத்தில் தான் கிறிஸ்து வருவார்.**

கிறிஸ்துவானவர், ''இதோ சீக்கிரமாய்'' வருகிறேன் என்று சொல்லிச் சென்று, இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டபடியால் அவர் சீக்கிரம் வருகிறார் என்று சொல்வதே தவறு என்று சிலர் நினைக்கின்றனர். அவர் எப்பொழுது வந்தாலும், இன்றைக்கே வந்தாலும் அல்லது இன்றிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து வந்தாலும், நித்தியத்தோடு இந்தக் கால அளவை ஒப்பிடும்போது இவைகள் குறுகிய காலமே. ஆகையால் இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருசிறார் என்று கூறுவதில் தவறேதுமில்லை.

கிறிஸ்துவின் வருகை சம்பந்தமாக அநேக காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை நேசித்து மதிக்கும் ஒவ்வொருவரையும் அவைகள் திருப்திபடுத்த வேண்டும்.

1 நான் மறுபடியும் வருவேன் என்று இயேசு கூறினார். அவர் சொல்வதைக் கேளுங்கள், ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். (யோவான் 14:1-3). இவ்வசனங்கள் நிச்சயமானதும் உறுதியானதுமாகும்.

2 பரலோகத்தில் இருக்கிற பிதா தவிர வேறு யாருக்கும் அவருடைய வருகை தெரியாது என்று நாம் சொல்லப்பட்டிருக்கிறோம். இயேசு தாமே கூறுவதைக் கேளுங்கள்,'' அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் ''. (மத்தேயு 24: 36). அந்த நாள் பிதாவுக்கு மட்டுமே தெரியுமானால் மனிதன் எங்ஙனம் அத்தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும் ?

3. இயேசு கிறிஸ்து இரவில் திருடன் வருகிற விதமாய் வருவார் என்று வேத வாக்கியங்களில் நாம் காண்கிறோம். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், (II பேதுரு 3; 10 ) அவர் ஒரு திருடன் அல்ல ஆனால் யாரும் எதிர்பாரா வண்ணம்' திருடனைப் போல வருவார்,

4. கர்த்தர் திரும்ப வரும்பொழுது,.... வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்,

பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (II பேதுரு 3:10), இயேசு கிறிஸ்து திரும்ப வந்து அக்கிரமக்காரரை அழித்து அவருடைய பிள்ளைகளை ஆயிரம் வருடம் அரசாளுவார் என்பது மேற்கண்ட வசனபகுதிக்கு முற்றிலும் விரோதமானது.

5. கிறிஸ்துவின் வருகையின் போது, நீதிமான்கள் அக்கிரமக்காரர் ஆகிய யாவரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். இதையே யோவான் ஆசிரியர்,'' இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனெனில் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்'' (யோவான் 5: 28, 29) என்று கூறுகிறார்.

6. இயேசு கிறிஸ்து வரும்பொழுது உயிரோடிருக்கிற நீதிமான்கள் அவரை தரிசிக்கும் படியாக மேகங்களுக்குள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பவுல்அடியார் இதைக்குறித்து இவ்விதமாகக் கூறுகிறார்,'' ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்'' (I தெச 4: 16, 17).

7. இராஜ்ஜியமாகிய சபைக்கு புறம்பேயிருக்கிறவர்களை ஒன்றுசேர்த்து நரகத்திலே தள்ளும்படியாக அந்நாளில் கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13 : 41, 42)

8. பெரிதும், இறுதியுமான நியாயத் தீர்ப்பு நடக்கும். எபிரேய ஆசிரியர் இவ்விதமாய் சொல்கிறார், ''அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது,, (எபிரேயர் 9:27). இதையே பவுலடியார்

கொரிந்தியருக்கு எழுதும்பொழுது, ''ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' (II கொரி. 5 10) எனக்குறிப்பிடுகிறார்,

9. நியாயத் தீர்ப்பிலே நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும், என்றென்றும் கர்த்தரோடிருக்கவும், செய்வார்கள், ஆனால் அக்கிரமக்காரரோ நித்தியநரகத்திலே தள்ளப்படுவார்கள், (மத் 25: 46)

ஆம், கிறிஸ்து மீண்டும் வருவார். உண்மையாகவே, விரைவில் வருவார். அப்பொழுது அநேக காரியங்கள் நிகழும், ஆனால் அவைகள் இன்றைக்கு அநேகர் போதிப்பதற்கு மாறுக இருக்கும். இயேசு கிறிஸ்துவின் வருகைபற்றியும், அப்பொழுது நடக்கும் சம்பவங்கள் குறித்தும் நீங்கள் வஞ்சிக்கப்படாமல் எச்சரிக்கையாயிருங்கள். அவர் ஒருமுறை வந்துவிட்டால், பிறகு அவரைச் சந்திக்க ஆயத்தமாகுதல் என்பது இயலாத ஒன்று. இப்பொழுது நம்முன் இருக்கும் பிரதான கேள்வி இதுவே: இந்த நிமிடத்தில் கிறிஸ்துவைசந்திக்க நீங்கள் ஆயத்தமா? உங்கள்பதில் இல்லையானால் தயவுகூர்ந்து உங்களுக்குநேரமும், வாய்ப்பும்இருக்கும்பொழுதே ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். ஏனெனில், இயேசு கிறிஸ்து வருவார் என்பது அதி நிச்சயமானது. அவர் எப்பொழுது வருவார் என்பது தான் நமக்குத் தெரியாது. ஆனுல் அவர் நிச்சயம் வருவார். மீண்டும் கேட்கிறேன் அவரை சந்திக்க நீங்கள் ஆயத்தமா ?

J. C. சோட்.

**நீங்கள் பிரகாசிக்கிறீர்களா?**

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்,

இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. மத்தேயு 5: 14-16

**பெண்கள் பகுதி**

# நல்ல தாயார்

*பெண்கள் தாய்மை அடைவது இயற்கை. ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பெண்கள தாய்மையடைந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் அதை ஒரு திட்டத்தோடும், நோக்கத்தோடும் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு பெண்ணின் வயிற்றில் சிசு உருவாவதற்கான வித்து இட்டு விட்டால் அவள் அதைப்பற்றி அக்கறை கொள்கிறாளோ இல்லையோ அது தானாக வளர ஆரம்பித்து விடுகிறது.*

*தற்காலத்தில் பிள்ளைப்பேறு திட்டமிடப்படுவதில்லை என்பதுகூடப் பரவாயில்லை. அதைக் கருவிலேயே கொன்றுவிடுவது பாவமல்ல என்ற மனநிலை சர்வ சாதாரணமாகிவிட்டது. அது தேவனுக்கு விரோதமான பாவம் என்றும் ஏதும் அறியாத அந்த சிசுவுக்குச் செய்யப்படுகிற அநீதி என்றும், ஏன் சம்பந்தப்பட்ட அந்த பெண்ணுக்கேகூட ஆபத்தானது என்றும் உணராமல் இருக்கிறார்கள். ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சிசுக்களை கருவிலேயே சிதைத்து விடுவதை சமுதாயமும், அரசாங்கமும் ஏதேதோ காரணங்களைச் சொல்லி நியாயப்படுத்தினாலும் தேவனுடைய பார்வையில் அது குற்றம் குற்றமே,*

*எப்படியிருந்தபோதிலும் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் இவ்விதமான இடர்பாடுகளுக்குச் சிக்காமல் தப்பி உரிய காலத்தில் பிறந்து கொண்டுதான் இருக்கின்றன. அவைகளில் பல ஏழைக் குடும்பங்களிலும், சில பணக்காரக் குடும்பங்களிலும் சில அளவில் சிறிய குடும்பங்களிலும், சில பெரிய குடும்பங்களிலும் பிறக்கின்றன. அங்கே அவைகள் பிறந்ததினால் மகிழ்ச்சியும் இருக்கலாம், சில வேளைகளில் துக்கம்கூட ஏற்படலாம். அது அந்தந்தக் குடும்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது.*

*ஆனால் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளமுடியாத அந்த அப்பாவிச் சிசுக்கள் ஒவ்வொன்றிற்கும் தேவன் ஒரு தாயைக் கொடுத்திருக்கிறார். என்னே தேவனின் ஞானமும் அக்கறையும்!*

*இங்கே இரண்டொரு கேள்வி. தாய் என்ற சொல்லின் முழுப் பொருள் என்ன? ஒரு குழந்தையைப் பத்து மாதம் சுமப்*

பது மட்டும் தானா? இந்தக் கேள்விகளுக்கு விடை காண முயலுவோம்.

**1. தாய் என்பவள் அன்பே உருவானவள் :**

எப்பொழுது ஒரு கரு உருவானதோ அன்றுமுதல் அது ஒரு குழந்தையாகப் பிறக்கும்வரை ஒவ்வொரு நிலையிலும், அசைவிலும் அந்தப் புதிய உயிரை நேசிக்கிறாள். பின்னர் குழந்தை பிறந்து தன்னைத் தானே பராமரித்துக் கொள்ளமுடியாத பச்சிளங் குழந்தையாக இருக்கும்போது அவளுடைய அன்பு பெருகுகிறது. பின்னர் குப்புற விழுந்து, தவழ்ந்து, நடைபயின்று மழலை பேசி, பள்ளிக்குச் செல்லும் காலம் வரை ஒவ்வொரு பருவத்திலும் அவளுடைய அன்பும் கூடவே வளருகிறது. பூரிப்பும், மகிழ்ச்சியும் அடைகிறாள். அது ஆளாகி தன்னைத் தானே பராமரித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டாலும் அவளுடைய அன்பு மட்டும் தணிவதில்லை. உண்மையிலேயே தாயன்புக்கு உலகில் நிகரேது?

**2. தாய் என்பவள் மென்மையானவள் :**

தான் பெற்றெடுத்த அந்த அருமைச் செல்வம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிற காலத்திலும், நோயுற்று அவதிப்படும்போதும், வேறு எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வேறு எவர் வேண்டுமானாலும் கசந்துபோய் வெறுத்து விடலாம். ஆனால் பெற்றெடுத்த தாய் மட்டும் ஒருபோதும் சலிப்படைந்து வெறுத்து விடமாட்டாள். இறைவன் ஒவ்வொரு குழந்தையையும் நேரடியாகக் கவனிக்க முடியாது. ஆகவேதான் தாயைத்தன் பிரதிநிதியாக ஏற்படுத்தியிருக்கிறார் என்று ஒருவர் சொன்னார். எவ்வளவு உண்மை!

**3. தாய் என்பவள் மன உருக்கமுள்ளவள் :**

நான் சிறு பெண்ணாக இருந்தபொழுது சில மாற்றங்களும் துன்பங்களும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன. ஆனால் அவைகள் ஒன்றும், என் குழந்தைகள் துன்பப்படுவதைக் காணும்போது எனக்கு ஏற்படுகிற துன்பங்களின் அளவுக்கு, என்னைக் கவலைப்பட வைத்ததில்லை என்று துணிந்து கூறுவேன் எனக்கு இருக்கிற எல்லாவித பலத்தையும் வாய்ப்பையும் பயன்படுத்தி அவர்களுடைய துன்பங்களை எப்பாடுபட்டாவது துடைத்துப் போடவேண்டும் என்று என் உள்ளம் துடிக்கும். எந்த ஒரு நல்ல தாயும் என்னைப் போலவே நினைப்பாள் என்பதில் சந்தேகமில்லை.

4. **தாய் என்பவள் தியாக சிந்தனையுள்ளவள் :**

ஒரு குடும்பத்தில் எல்லாருக்கும் புத்தாடைகள் வாங்கப் போதிய பணம் இல்லாவிட்டால் யாருக்குப் புத்தாடையில்லாமல் போகும்?, எல்லாருக்கும் பிடித்தமான உணவு ஒன்றைத் தயாரிக்கிறோம். திடீரென்று ஒரு விருந்தாளி வந்து விட்டாலோ அல்லது எப்படியோ குறைவுபட்டு விடுகிறது, யார் எனக்கு வேண்டாம், எனக்குப் பசியில்லை என்று மழுப்பி விட்டு மற்றவர்களுக்கு பரிமாறி மகிழ்வாள்? அல்லது இது எனக்குப் பிடிக்காது, வேறே உணவு எனக்கு இருக்கிறது, நீங்கள் எல்லாரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று கூசாமல் பொய் சொல்லி, தன் ஆசையை மறைத்து தியாகம் செய்வாள்? நிச்சயமாகத் தாய்தான். இதில் மட்டும் அல்ல எப்பொழுதெல்லாம் ஒரு குடும்பத்தில் ஏதாவது ஒருவர் தியாகம் செய்ய வேண்டும் என்று வந்தால் தாயார் தான் முதல் நபர். அவள் அப்படிச் செய்ய வேண்டும் என்று பிறர் கட்டாயப் படுத்துவதினால் அல்ல, அவர் தன் குடும்பத்தை நேசிக்கிறபடியால் தானே மனமுவந்து செய்கிற அன்புச் செயல்.

5. **தாய் ஒழுக்கத்தைக் கற்பிப்பவள் :**

ஒரு தாய் தன் குழந்தைகளை உண்மையாகவே நேசிக்கிறவளாயிருந்தால் அவள் தன் பிள்ளைகள் தவறு செய்தால் கொஞ்சிக் கொண்டிருக்க மாட்டாள். கண்டிப்பும் கறாருமாக இருந்து அவர்கள் தவறுகளைக் கண்டித்து உணர்த்துவாள். குழந்தைகளுக்கு எது நல்லது எது கெட்டது என்று அவ்வளவாய்த் தெரியாது ஆகவே தாயார் சொல்லித் தான் தெரிந்து கொள்ள முடியும்; தகப்பனார் எப்பொழுதுமே வீட்டில் இருந்து கொண்டு கண்காணித்துக் கொண்டு இருக்க முடியாது. ஆகவே அவர்கள் செய்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டிக் கண்டித்து உணர்த்துவது தாயாரின் கடமையாகும்.

6 **தாய் நற்பண்புகளைக் கற்றுத் தருபவள் :**

பெண்களாகிய நாம் ஞானமுள்ளவர்கள். நம்முடைய குழந்தைகளுக்கு எது தேவை, எது தேவை இல்லை என்பதைக் கணவன் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. அவர்கள் வீட்டிலும், சமுதாயத்திலும் எப்படி எப்படிப் பழக வேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற காரியங்களில் கூட உதவலாம். அவைகள் எல்லாவற்றையும் விட ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் வளருவதற்கான பயிற்சியைக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்

**7. தாய் தன் குழந்தைகளை நன்கு அறிவாள் :**

குழந்தைகளுடைய போக்கும், சுபாவமும் எப்படிப்பட்டது என்பதை மிகத்துல்லியமாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புள்ளவள் தாயே. குழந்தைகளுடைய உணர்வுகள், பழக்க வழக்கங்கள், அவர்களுடைய பலம், பலவீனம் யாவும் நன்றாகத் தெரியும். ஆகையால் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் தந்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்,

**8. தாய் ஜெப சிந்தனையுள்ளவள் :**

தாய் எல்லா நேரங்களிலும் தன் பிள்ளைகளோடு இருக்க முடியாதல்லவா?. மேலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் முழு அளவில் தர இயலாது. ஆகவே அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் சம்பூர்ணமாய்த் தர வல்லமையுள்ள தேவனை அவர்கள் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். வேதம் வாசித்து அதன் பொருளை உணரவும், ஜெபிக்கவும் அவருடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், தன் முன் மாதிரியினாலே கற்றுத் தர வேண்டும்,

மேற்கூறிய மாதிரி தங்கள் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பவளே சிறந்த தாய். சகோதரியே, நீ எப்படிப்பட்ட தாயாக இருக்கிறாய்?

B B CHOATE R R NAYAGAM

---

**உங்கள் ஜெபத்திற்கு பலன் வேண்டுமா?**

அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

மத்தேயு 6:6 ,7.

# கிறிஸ்துவின் சபையைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில காரியங்கள்

புதிய ஏற்பாட்டில் சபை முதல் முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மத் 16: 18; ரோமர் 16: 16) இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்டு, கிரையங் கொள்ளப்பட்டது, (மத் 16;13-18; அப் 20: 28) கிறிஸ்துவை ஒரே அஸ்திபாரமாகக் கொண்டு கட்டப்பட்டது, (I கொரி 3:11) பவுல் மேலோ, அப்பொல்லோ மேலோ, கேபா மேலோ அல்லது வேறு எந்த மனிதன் மேலோ கட்டப்படவில்லை, (1, கொரி 1; 12,13) கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளிலே முற்றிலுமாக சபை நிறுவப்பட்டது. (லூக் 24: 49;அப் 1;8; மாற்கு 1;9; அப் 2)

கிறிஸ்துவே சபையை நேசித்தார் (எபே 5:25)சபைக்காக இரத்தஞ் சிந்தினார். (அப் 20: 28) சபையை நிறுவினார் (மத் 16;18) சபையை தன்னுடையது என சொந்தங் கொண்டாடினார். (மத் 16:18)சபையில் மக்களை சேர்த்தார் (அப் 2;47) சபையின் தலைவராயிருக்கிறார். (எபே. 5:23; 4;4 : 1:22.23) சபையை இரட்சிப்பார் (எபே 5:23;4:4; 1:22.23) என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தரின் ஒரே குடும்பம். (எபே. 3;15) கிறிஸ்துவின் ஒரே ராஜ்ஜியம் (கொலோ 1;13-14) கிறிஸ்துவின் ஒரே சரீரம் (எபே 1:22-23; 4:4) கிறிஸ்துவின் ஒரே மணவாட்டி (ரோ 7:17; எபே 5:22 23) கிறிஸ்துவின் ஒரே சபை (மத் 16;18) எபே 1;22-23; 4;4) மட்டுமே இருந்தது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கர்த்தரின் ஆலயம் (1 கொரி 3:16) கிறிஸ்துவின் மணவாட்டி (கொலோ 1;24; எபே 1;22.23) தேவ குமாரனுடைய ராஜ்ஜியம் (கொலோ 1:13 தேவனுடைய வீடு (1.தீமோ 3:15) சபை. (எபே 3:10) தேவனுடைய சபை. (1 கொரி 1:2) முதற்பேறானவர்களின் சபை, (எபி 12:23) கர்த்தருடைய சபை (அப் 20;28) கிறிஸ்துவின் சபையார் (ரோ 16;16) எனவும் புதிய ஏற்பாட்டிலே சபை குறிப்பிடப்பட்டுள்ளது என்புதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்,

சபை உறுப்பினர்கள் அவயவங்கள் என்றும் (1.கொரி 12:27) சீடர்கள் (அப் 6:1) விசுவாசிகள் (அப் 5:14 ;2 கொரி 6:15) பரிசுத்தவான்கள் (அப் 9:18;ரோ 1:7 பிலி 1:1) ஆசாரியர்கள் (1, பேது 2:9;வெளி 1:6) பிள்ளைகள் (1.யோ 3 1-2) கிறிஸ்துவர்கள் (அப் 11:26;26:28,29; 1. பேது 4:16 என்றும் அழைக்கப்படுகிறார்கள்,

சபையின் நிரந்தர ஊழியர்கள் மூப்பர்கள் எனப்படும் கண்காணிகள் அல்லது மேய்ப்பர்கள் ஆவர். இவர்கள் மந்தையைக் கவனித்து மேய்ப்பவர்களாயிருக்கிறார்கள். (அப் 20:28; தீத்து 1:5-9; 1 பேது 5:1-4) உதவிக்காரர்கள் சபைக்கு ஊழியஞ் செய்கிறார்கள். அப் 6:1-6; 1 தீமோ 3:8-13) சுவிசேஷகர்கள் தேவனுடைய வசனத்தைப் (போதிக்கிறார்கள். எபே. 4:13; 1 தீமோ; 2 தீமோ, தீத்து) போதகர்கள் தேவனுடைய வசனத்தைச் கற்பிக்கிறார்கள். (எபே 4:13)

மனிதன் சபையை உண்டாக்கவில்லை (எபே. 3:10-11) கிரையங்கொள்ளவில்லை (அப் 20:28) சபையைக் கட்டவில்லை (மத் 16:18) உறுப்பினர்களுக்கு பெயரிடவில்லை. (அப் 11:26) சபையில் சேர்க்கவில்லை (அப் 2:47) சபைக்கு சட்டம் அளிக்கவில்லை. (2 யோ 9:11; கலா 1:11)

சபையும் கிறிஸ்துவின் சரீரமும் ஒன்றே என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். (எபே, 1:22-23; கொலோ 1:18,24)

மீட்பு (எபே, 1:7) பாவமன்னிப்பு (கொலோ 1:14-14) புனிதமாகுதல் (எபே 5:25) ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் (எபே 1:3) சபைக்குள் உங்களுக்குக் கிடைக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளுங்கள். சபைக்குள் அங்கம் வகிக்க நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும். அல்லது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். (அப் 2:38,57)

எப்படி? எப்போது நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களோ (யோ 8:24; அப் 16:31; எபி 11:6) பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு கேட்கிறீர்களோ (லூக் 23:3; அப் 2:38; 3:19; 17:30) கிறிஸ்துவின் பேரிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கை இடுகிறீர்களோ (மத் 10:32-33; ரோமர் 10:10; அப் 8:37-38) இறுதியில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறீர்களோ (மத் 28:19; மாற்கு 16:15; அப் 2:38; 22:17; 1பேது 3 21 கலா 3:26-27) அப்போது நீங்கள் சபையில் அங்கம் பெறுகிறீர்கள்.

தண்ணீர் வேண்டும் (அப் 10:47) நிறைய தண்ணீர் வேண்டும் (யோ 4:23) தண்ணீருக்குள் செல்லவேண்டும். (அப் 8:36; மத் 3:5-6) தண்ணீருக்குள் மூழ்க வேண்டும் (அப் 8:38) ஒரு அடக்கம் (ரோ 6:3-5; கொலோ 2:12) ஒரு இணைப்பு (ரோ 6:5) ஒரு கழுவப்படல் (அப் 22:16) ஒரு பிறப்பு (யோ 3:5) தண்ணீரிலிருந்து எழுதல் (கொலோ 2:12) தண்ணீரிலிருந்து வெளியேறுதல். (அப் 8:39) இவை யாவும் ஞானஸ்நானம் பெறத் தேவை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

ஞானஸ்நானத்தால் பாவங்கள் கழுவப்படுகின்றன. (அப் 22:16) பாவங்களில் இருந்து மீட்பு கிடைக்கிறது. (பேதுரு 3:21; மாற்கு 16:16) பாவமன்னிப்பு கிடைக்கிறது (அப் 2:38) கிறிஸ்துவுக்குள் வருகிறாய் (கலா 3:27) சபைக்குள் வருகிறாய். (அப் 2:37-47) கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறாய். (கலா 3:27) புதிய ஜீவனோடு நடக்க தொடங்குகிறாய். (ரோ 6:3-5) கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறாய், (அப் 10:48; 2தெச 1:7-8)

விசுவாசமுள்ள சபை, உண்மையோடும் ஆவியோடும் தொழ வேண்டும் (யோ 4:24) வாரத்தின் முதல் நாள் கூடி வர வேண்டும். (அப் 20:7; எபி 10:25) பாட வேண்டும் (இசைகருவிகள் இன்றி) (எபே 5:19; கொலோ 3:16) ஜெபம் செய்ய வேண்டும். அப் 2:42; 1தீமோ 2:1-2) ஒருவருக்கொருவர் பக்தி விருத்திக்கேற்ப நடக்க வேண்டும். 1 கொரி 14:15-27) கர்த்தரின் பந்தியில் வாரத்தின் முதல் நாள் தோறும் பங்கு பெற வேண்டும். (அப் 20:7; எபி 10:26; 1. கொரி 11:10-32) அவரவர் தகுதிக் கேற்றவாறு கொடுக்க வேண்டும். (1. கொரி 16:1, 2; 2 கொரி 9:7)

அதே சபை இன்றும் நிலைத்திருக்கிறது. அது எவ்விதத்திலும் ஒரு பிரிவினைச் சபை அல்ல. கர்த்தரின் வசனத்திற்கு விசுவாசமாக நடக்கும் சபை அது. ஒரே சத்தியத்தைப் போதிக்கும் சபை. நற்செய்திக்குக் கீழ்ப்படிவோரை அங்கத்தினராகக் கொண்டது. மனித அதிகாரத்திற்கு உட்படாத, சுதந்திரமானசபை. அங்கத்தினர்களும், அதே பெயரால் அழைக்கப்படுகின்றனர். சபைக்கும் அதே பெயர். நீங்களும் அதில் அங்கம் வகிக்க முடியும்.

மேலும் விவரங்களுக்கு ஆசிரியரை அனுகவும்,

தமிழில் எஸ். எஸ். ராஜன்.

# என்றும் மாறாத கிறிஸ்து

உலகத்தலைவர்கள், தங்கள் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர், ஆனால் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ சாதாரண ஒரு தலைவர் அல்ல. ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா-யிருக்கிறார்'' (எபி. 13:8) என அவரைப்பற்றி தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ''நான் கர்த்தர், நான் மாறாதவர்'' மல்கியா 3:6) என இஸ்ரவேல் மக்களிடம் கூறிய அவருடைய பிதாவைப் போன்றவர் இயேசு.

பாவிகளின் பேரில் இரக்கப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் ''(மத். 11:28) எனக் கூறிய நமது இரட்சகர் ''இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'' (வெளி. 1:18) எனவும் கூறியதோடு, ''தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார்'' (2 பேதுரு 3:9).

நமது இரட்சகர், ''இருக்கிறவரும், இருந்தவரும் வருகிற-வருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்; நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்'' (வெளி 1:18).

நீங்கள் இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டும் என விரும்பினால், தயவு செய்து உங்கள் வேதாகமத்தில் கீழ்க்கண்ட வசனப்பகுதிகளை கவனத்தோடும், விசுவாசத்தோடும், பயபக்தி-யுடனும் படித்துப் பாருங்கள்: அப்போஸ்தலர் நடபடி 16:31, மாற்கு 26:16; அப். நடபடி 2:38; 2 பேதுரு 1:5-11; மதி. 10:22; வெளிப். 2:10.

''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவ-னும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்'' (வெளி 22:17).

''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என யோவான் கூறினார். (யோவா. 1:29),

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என இயேசு கூறினார். (யோ. 14:6)

ஒருபோதும் அழியாத, இரட்சிப்பளிக்கும் நற்செய்திகள் மிகவும் விலைபெறப் பெற்ற சத்தியங்களுள், விவரிக்க முடியாத அருமையான உண்மை ஒன்று என்னவென்றால், "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி 7:25)

G-F. Rainis

எஸ். எஸ். ராஜன்

## நீதிமான் யார்?

1. நியாயத்தையும், நீதியையும் செய்து
2. மலைகளின் மேல் சாப்பிடாமலும்
3. இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும்
4. தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்
5. தூர ஸ்திரீயோடே சேராமலும்
6. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலும்
7. கடன் வாங்கினவனுக்கு அடமானத்தை திருப்பிக் கொடுத்து
8. தன் அப்பத்தை பசித்தவனுக்குப் பங்கிட்டு
9. வஸ்திரம் இல்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து
10. வட்டிக்குக் கொடாமலும், பொலிசை வாங்காமலும்
11. அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி
12. மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து
13. கர்த்தருடைய கட்டளையின்படி நடந்து உண்மையாயிருப்பவனே

எசேக்கியேல் 18:5-9

# நற்செய்தியைப் போதிப்போம்

உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன்னர் தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார். (மாற்கு 16:15). ''சத்திய வசனமும் இரட்சிப்பின் நற்செய்தி-யுமான'' (எபி. 1:13) ''வசனத்தை மட்டுமே போதிக்க'' (2 தீமோ. 4:2) பிற போதகர்களிடம் அப்போஸ்தலர்கள் எச்சரித்-தனர்.

கலப்படமற்ற சத்திய வசனங்களின் எளிய போதனைகள் பிரமிக்கத்தக்க முடிவுகளை விளைவித்தன. தற்காலத்தைப் போல் இல்லாமல், முதல் நூற்றாண்டு போதகர்களுக்கு போக்கு வரத்து வசதிகளோ ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் வசதிகளோ மிகவும் கடினமாக இருந்தன. அப்போஸ்தலர் யோவானின் மரணத்திற்கு முன், ரோமப் பேரரசில் ஏறத்தாழ 60 லட்சம் கிறிஸ்தவர்கள் இருந்ததாக ஒரு அவிசுவாசியே ஒப்புக்கொண்டுள்-ளார்.

வசனங்களை தங்கள் வசதிக்கேற்ப வளைத்துக் கொள்ளும் நூறு மத போதகர்களின் சாதனைகளைவிட, கர்த்தருடைய வசனத்தை, கூட்டாமலும் அல்லது குறைக்காமலும், அப்படியே போதிக்கும் ஒரு நல்ல மனிதன் உண்மையிலேயே அதிகமான நற்சாதனைகளைப் படைப்பவனாக விளங்குவான். மனிதனுடைய தத்துவம் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை ஒரு ஆத்துமாவைக் கூட இரட்சித்ததில்லை. கிறிஸ்துவின் ''நற்செய்தியோ ''இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது ''(ரோமர் 1:16) எனவே ''லௌகீக ஞானத்திலும், மாயமான தந்திரத்திலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையா-யிருங்கள்'' (கொலோ. 2:8). ''இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்-குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்'' (1 கொரி. 2:2). அதே சிறந்த தீர்மானத்தை நாமும் வாழ்வில் ஏற்றுக் கொள்வோம்.

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை-யைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்போமாக'', (கலா. 6:14).

G.F. Rainis

G F. ரெய்ன்ஸ்

# இயேசு கிறிஸ்துவின் வாய்மொழிகளும்

# புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின்

# வாசகங்களும்

வேதாகமத்தைக் குறித்து மக்களிடம் பேச ஆரம்பித்தால் அவர்கள் வேதாகமத்தைப் பற்றி கொண்டிருக்கும் பல விநோத-மான கருத்துக்களை அறியமுடியும். அவைகளில் முக்கியமான ஒன்று இயேசு நேரடியாகச் சொன்ன, பேசிய வார்த்தைக்கும் வேதாகமத்தின் மற்ற ஆசிரியர்கள் எழுதின காரியங்களுக்கும் வித்-தியாசம் உண்டு என்பதாகும்.

அப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகள் தேவனுடைய சித்தத்தை அப்படியே பிரதிபலிப்பதாகவும், பவுல், பேதுரு இன்னும் மற்ற எழுத்தாளர்கள் கூறிய கருத்துக்கள் அப்படி அல்லவென்றும், அவற்றில் சிலவற்றை நாம் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தாலும் தவறு இல்லை என்றும் நினைக்கின்றனர்.

அபபோஸ்தலன் பவுல் எழுதினதிலிருந்து ஒரு மேற்கோள் காட்டப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம், உடனே அவர்கள் அது உண்மைதான். அதை வரிக்குவரி அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு அது ஒன்றும் இயேசுகிறிஸ்துவால் சொல்லப்பட்டதல்லவே என்பார்கள். அதாவது அவைகள் ஒன்றும் தேவவாக்கு அல்லவே என்பார்கள். அப்படி நினைக்கலாகாது. பவுல் மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் தேவ ஆவியினால் ஏவப்பட்டுத் தான் பேசினார்கள், எழுதினார்கள். ஆகவே அவைகளையும் நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவு விளக்கிச் சொன்னாலும் அவர்கள் அதை முற்றிலுமாக ஏற்றுக் கொள்வது கிடையாது.

இயேசு கிறிஸ்து உபதேசித்தவைகளைக் கொண்டே பாவி ஒருவன் எப்படி இரட்சிக்கப்பட முடியுமா, எப்படி கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்றும், இன்னும் கிறிஸ்தவத்துக்குரிய உபதேசங்களைப் போதிக்க முடியும் என்றாலும். மற்ற வேத வாக்கியங்களும் நமக்கு தேவையே, அவைகளையும் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும், எப்படியோ காலப்போக்கில் சில தவறான ஊகங்கள் உட்புகுந்து மற்ற எழுத்தாளர்களின் கருத்துக்களைக்

கொஞ்சம் அற்பமாக எண்ணும் சூழ்நிலை உருவாகிவிட்டது வருந்தத்தக்கது. இந்த சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து பேசின யாவும் சத்தியம் செய்து நிரூபிக்க முயல்வது தேவை இல்லாத வேலை. அது ஏற்கனவே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதைப்பற்றி இரண்டுவிதமான கருத்துகளுக்கு இட-மில்லை ஆனால் புதிய ஏற்பாடு முழுவதுமே தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் என்பதை நிரூபிப்பதே தற்போது நம்முடைய முயற்சி; அப்படிச்செய்து ஏனைய புதிய ஏற்பாடு எழுத்தாளர்கள் எழுதின அனைத்துமே தேவனால் கொடுக்கப் பட்ட சத்தியங்கள் தான் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அதுவே நமது நோக்கம்.

அதற்கு ஆரம்பமாக இயேசுகிறிஸ்துவுக்கும், அப்போஸ்-தலர்களுக்கும் உள்ள உறவைக் கவனிப்போம். இயேசு அவர்-கள்ள அழைத்து தம்மை பின்பற்றி வரும்படி கூறினார். (மத் 4:18-25) அவர்களுடைய பெயர்களை நாம் மத்தேயு 10-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அவர் அவர்களை அழைத்துப் பயிற்சி கொடுத்து தமக்குப் பிற்பாடு தம்முடைய பணிகளைத் தொடரும் வகையில் ஆயத்தப்படுத்தினார்.

கிறிஸ்து தேவனுடைய குமாரன்; அப்போஸ்தலர்கள் சாதா ரண மனிதர்கள் என்பது உண்மை, எனினும் அவருடைய பணி களை தொடர்ந்து செய்வதற்கு அவர்களை பயன்படுத்த வேண் டியது அவசியமாக இருந்தது. அவர்கள் சாதாரண மனிதர்களா யிருந்தாலும் சத்தியத்தையே போதித்தார்கள். அவைகள் பிழை யற்றவைகள் என்பதை உறுதி செய்ய தேற்றரவாளனாகிய பரி-சுத்த ஆவியானவரை அனுப்பி, அவர்களை எல்லா சத்தியத்துக் குள்ளும் வழிநடத்தும்படி செய்தார். ஒரு சமயம் கிறிஸ்து அவர் களிடம் "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். நான் போகா திருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போ-வேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன் என்று கூறினார்" (யோவான் 16:7)

மேலும் அவர், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்-முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவை யும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்-பார்" என்றார் (யோவான் 16:13) பின்னும் அவர் யோவான் 14:26ல் "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த

ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' என்றார். இயேசுகிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பரலோகத்திலிருக்கிற தன்னுடைய பிதாவினிடத்திற்குப் போகுமுன், அப்போஸ்தலர்களிடம் ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலன் அடைந்து எருசலேமிலும், யூதேயா மூழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப் 1;8) என்றார். அதன் பின்பு யூதர்களுடைய பிரதான பண்டிகைகளில் ஒன்றாகிய பெந்தேகோஸ்தே பண்டிகை நாளில், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் எருசலேமுக்கு வந்திருந்த திரளான யூதர்கள் மத்தியில், அப்போஸ்தலர்களும் கூடி வந்திருந்த போது, பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டார் என்றும், அவர்கள் ஆவியிலே நிறைந்திருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக எவ்வாறு பல்வேறு அந்நிய மொழிகளில் பேசினார்கள் என்றும் அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அதன் பிறகு அவர்கள் அங்கே கூடியிருந்த திரளான மக்களுக்கு சுவிசேஷப் பிரகடனம் செய்தார்கள் சுமார் மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்படிந்து சபையில் சேர்க்கப்பட்டார்கள். எல்லோருக்கும் பயம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. என்றும் நாம் வாசிக்கிறோம் (அப் 2: 43)

இங்கே சற்று நின்று சில உண்மைகளைக் கவனிப்போம்.

1. இயேசு கிறிஸ்து கூறினதைப் போலவே, அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியை அனுப்பித் தந்தார்.

2. அவர் கூறியதைப் போலவே, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு இயேசு போதித்தவைகளை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தார்.

3. அவர் கூறியதைப் போலவே பரிசுத்த ஆவியானவர் அவர்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தினார்.

4. அவர் கூறியதைப் போலவே, அப்போஸ்தலர்கள், கேட்கிற மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் வெவ்வேறு மொழிகளில் பேசினார்கள்.

5. அவர் கூறியதைப் போலவே, அவர்கள் தேவனுடைய சித்தத்-

தைத் தான் பேசினார்கள் என்பதற்கு அடையாளமாக அற்புத அடையாளங்களைச் செய்தார்கள்.

இவைகளை மனதில் கொண்டு, இவைகளோடு சம்பந்தமுள்ள மற்ற சில காரியங்களையும் கவனிப்போம். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்த பிறகு இயேசு சொன்னதாவது. மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக இராஜ்ஜியத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்'' என்கிறார் (மத் 16:18,16) இங்கே இயேசு பேதுரு செய்த அறிக்கையை விளக்கிப் பின் வருமாறு கூறுகிறார். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அந்தக் கற்பாறை அதாவது அந்த விசுவாச அறிக்கையின் மீது தன்னுடைய சபையைக் கட்டுவேன் என்கிறார். பின்னும் அவர், பரலோக இராஜ்ஜியத்தின் திறவு கோலை அவர்களுக்குத் தருவேன். அதாவது சபை அல்லது இராஜ்ஜியத்தின் அங்கம் ஆவதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று போதிக்கக் கூடிய அதிகாரத்தைக் கொடுப்பேன் என்று கூறுகிறார். அந்த அதிகாரத்தினால் அவர்கள் என்ன போதிக்கிறார்களோ அது பரலோகத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் எவைகளை கட்டவிழ்க்கிறார்களோ அதாவது எவைகள் அவசியமில்லை என்று கருதுகிறார்களோ அவைகள் பரலோகத்திலும் அவசியமில்லை என்று கருதப்படும். அதன் கருத்து யாதெனில், அவர்கள் பேசினது, போதித்தது எல்லாம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினபடியால் இயேசுக்கிறிஸ்து சொன்னதற்கு என்ன மரியாதை உண்டோ அதே மரியாதை அப்போஸ்தலர்கள் சொன்னதற்கும் எழுதியதற்கும் உண்டு என்பதாகும். பெரிய கட்டளை என்று வர்ணிக்கப்படும் வசனங்களில் இயேசு அப்போஸ்தலர்களுக்குச் சொன்னது ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம்

பண்ணுங்கள். இதோ முடிவு பரியந்தம், சகல நாட்களிலும் நான் உங்களோடே கூட இருக்கிறேன் என்றார். ஆமென் (மத் 28:1 20) மேலும் பின்பு அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:15,16)

இயேசு கிறிஸ்து மேற்குறிப்பிட்ட வசனங்களில் என்ன சொல்கிறார் என்று கவனியுங்கள் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்களை உலகெங்கிலும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவி-சேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்கிறார். மேலும், அவர் அவர்கள் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்குத் தொடர்ந்து இயேசு அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தவைகளைப் போதியுங்கள் என்கிறார் அப்படி அவர்கள் போதித்ததைக் கேட்ட நாமும் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்று போதித்து விளக்குகிறோம். அப்படியிருக்க நம்மில் எவருக்குமே இயேசு, இதையெல்லாம் சொல்லவில்லை என்று புறக்கணிக்க அதிகாரம் கிடையாது. அவைகள் இயேசுவின் வார்த்தைகளே. அவைகளை இயேசு அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தார், பிறகு அவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கும்படி சொன்னார். அப்படிப்போதிக்கும் போது தவறுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்பதற்காகப் பரிசுத்த ஆவியானவரை ஏவி, அவர்கள் சொல்லுவதிலும் எழுதுவதிலும் பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொண்டார். ஆகையால், அவர்கள் எழுதிவைத்தவைகளை வாசிக்கும் போது அவைகள் இயேசு போதித்த முழு உண்மை என்ற உணர்வே நமக்கு இருக்க வேண்டும்,

பின்னும் இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசும் போது கூறியவைகளைக் கேளுங்கள். ''ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவன் அல்ல என்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்-தைகளை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால் உங்களையும் துன்பப்படுத்துவார்-கள் அவர்கள் என் வசனத்தைக் கைக் கொண்டதுண்டால் உங்கள் வசனத்தையும் கைக் கொள்ளுவார்கள். (யோ 15:20) இயேசு சொன்னதைக் கவனித்தீர்களா? அவர்களை என் வார்த்தை-களைக் கைக் கொண்டிருந்தால் உங்களுடைய வார்த்தைகளையும் கைக் கொள்ளுவார்கள். அதாவது இயேசுவினுடைய உபதேசத்-

துக்கு ஒருவன் கீழ்படிந்தால் அவன் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தையும் கேட்டுக் கீழ்ப்படிவான் என்கிறார், ஏன்? ஏனெனில் கிறிஸ்து தமது சார்பால் பேசும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருந்தார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவுதலால் பேசினார்கள். ஒருவன் அப்போஸ்தலருடைய உபதேசத்துக்கு கீழ்ப்படிய மறுத்தால் அவன் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் கீழ்படிய மறுக்கிறான் என்று பொருள்.

அப்போஸ்தலனாகிய பவுல் "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்றும் (2 தீ 3:16. 17) அப்போஸ்தலனாகிய பேதுரு "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் என்றும்" (2 பேது 1:21) கூறுகின்றனர். எபிரேய நிருப ஆசிரியரும் இதைப் பற்றி மௌனமாக இருக்கவில்லை. ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும் என்கிறார்.

"ஏனெனில் தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்துக்கு விரோதமான எந்த செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்பட்டிருக்க முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு", பின்பு "அவரிடத்திலே கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும் அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபி 2:1-4) யாரைக் குறித்து இப்படிச் சொல்லப்பட்டிருக்கிது? அப்போஸ்தலர்களைப் பற்றித்தான் என்பது தான் தெளிவு.

அப்போஸ்தலன் பவுல், தான் ஒரே தூய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன் என்கிறார். எவனாலும் வானத்திலிருந்து வந்த தூதனாகவே இருந்தாலும் அதற்கு மாறாகப் போதித்தால் தேவனுடைய சாபம் அவன் மீது இருக்கும் என்கிறார் (அ 1:8-9) "நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் என்று முடிவாகக் கூறுகிறார்" (கலா 1-12)

அப்போஸ்தலன் யோவான் ''இதேப் புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிறயாவருக்கும் நான் சாட்சி-யாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் கூட்டுவார்''.

''ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களி-லிருந்துஎதையாகிலும் எடுத்துப்போட்டால் இந்தப்புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்தில் இருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் என்கிறார்'' (வெளி 22:18-19)

பிரியமானவர்களே! தொடர்ந்து மேலே செல்லாமல், மேற்-சொன்ன வசனங்களின் துணை கொண்டே புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சொன்னவைகள் எல்லாம் தேவ ஆவியானால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள்தான் என்று தீர்மானிக்க முடியும் என்று நம்புகிறேன். கிறிஸ்து சொன்னவைகளுக்கு ஒரு துளியும் குறைவுபடாத மரியாதை அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்-களுக்கும் வார்த்தைகளுக்கும் உண்டு. கிறிஸ்து சொன்னதை ஏற்றுக் கொள்வது அல்லது தள்ளி விடுவது எத்தகைய விளைவுகளை உண்டாக்குமோ அதே விளைவுகள் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளையும் எழுத்துக்களையும் ஏற்றுக் கொள்வதற்கும், தள்ளிப் போடுவதற்கும் உண்டு. ஒன்றை ஏற்றுக் கொண்டு மற்றொன்றைத் தள்ளிப் போடுவது நியாயமாகாது. இயேசு கிறிஸ்து சொன்னதை மட்டும் ஏற்றுக் கொள்வேன். ஏனைய புதிய ஏற்-பாட்டு எழுத்தாளர்கள் கூறியவைகளையும் எழுதினவைகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்போமானால் அது கிறிஸ்துவை நாம் கனம்பண்ணுகிறது ஆகாது அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் எழுத்துக்களையும் அசட்டை செய்வது அந்த வார்த்தைகளைக் கொடுத்த பரிசுத்த ஆவியானவரை அசட்டை செய்வதற்குச் சமம். அவர்களை ஏவி எழுதும்படி பரிசுத்த ஆவியை அனுப்பித் தந்த இயேசு கிறிஸ்துவை அசட்டை செய்வதற்குச் சமம்.

தயவு செய்து இவைகளைச் சிந்தித்துப் பாருங்கள். வேத வசனங்களை ஆய்ந்து படியுங்கள். விசுவாசியுங்கள். கீழே படியுங்-கள் அவைகளை எலலாவற்றையும் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். அவைகளில் ஒரு சில பகுதியை மட்டும் அல்ல ''முழுமையாக வேத வாக்கியங்கள் எல்லமே தேவ ஆவியினால் ஏவப்பட்டு அருளப்பட்டவைகள் என்பதை மறவாதீர்.

J. C. சோட்

# பெண்கள் சபையில் போதிக்கலாமா?

இக்கேள்விக்கு விடைகாண' இக்காரியத்தில் தேவனின் விருப்பம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம், அவர் நமக்கு அளித்துள்ள சுவிசேஷத்தில் தான் அதற்கான விடையைக் காண முடியும். ''சபையில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை..''(1 கொரி 14 : 34 ) பெண் போதகர்களைக் கொண்ட சபை, கர்த்தரின் உண்மையான சபையாக இருக்க முடியாது; ''உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை'' என வேதாகமம் கூறுகிறது, ( 1 தீமோ. 2 : 12 ).

துணிச்சல் உள்ள பெண்ணே போதிக்கப் புறப்படுவாள். துணிச்சல் என்றால் ''சரியான செயல் ஒன்றுக்கு மாறுபட்டதைச் செய்வது.. தேவையற்ற சுதந்தரத்தை எடுத்துக் கொள்வது'' எனப்பொருள், ''எவனாவது துணிகரமாய் யாதொன்றையும் செய்தால் அவன் கர்த்தரை நிந்திக்கிறான்'' என எண்ணாகமம் 15:30 வசனம் கூறுகிறது.

கர்த்தருடைய வசனத்தை ஒதுக்குகிறவன் கர்த்தரையே ஒதுக்குகிறான் பெண்கள் போதிக்கப் புறப்படுவது அவர்களது கீழ்ப்படியாமையைக் காட்டுகிறது. பெண்கள் போதித்தும் கண்டிக்கப்படாத சில சந்தர்ப்பங்களையும் வேதாகமத்தில் நாம் காண முடியும் ஏனெனில் அவர்கள் ஆண்கள் கூட்டத்தில் போதிக்கவில்லை. லோவிசாளும் ஐனிக்கேயாளும் தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்தனர். (2 திமோ 1 : 5; 3 : 15), கர்த்தருடைய வழியைப் பற்றி ஒரு மனிதனுக்கு உபதேசிக்க தன் கணவனுக்கு பிரிஸ்கில்லா உதவினாள். ( அப், 18 : 26). முதிர் வயசான பெண்கள் இளம் பெண்களுக்குப் போதிக்க வேண்டும் (தீத்து 2: 3-4) கர்த்தரை நசிக்கும் ஒரு பெண் பொது இடங்களைத் தவிர்த்து, தன் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு உபதேசிப்பது அவளுடைய கடமையாகும்.

இயேசு தனது ஒரே சத்திய சபையை உண்டாக்கினார், சபையை வழி நடத்தவும் பொது மக்களுக்குப் போதிக்கவும் ஆண்களுக்கு மட்டுமே அதிகாரத்தைக் கொடுத்தார். மூப்பர்கள் ஒரு மனைவியை உடையவர்களாக இருத்தல் வேண்டும் (1 தீமோ 3:2) விசுவாசமுள்ள மனிதர்கள் போதிக்க வேண்டும் (2 தீமோ. 2:2) ஆண்கள் சபையை வழி நடத்தவும், பெண்கள் சபையில் பேசாதிருக்கவும் தேவன் கட்டளையிட்டார் (1 கொரி. 14 ; 34). பெண்கள் போதிப்பதை அவர் தடை செய்துள்ளார் பெண்களை ஆண்கள் அடிமைபடுத்தும் செயலாக இதைக் கருதக்கூடாது. ஆனால் தேவனின் விருப்பம் எதுவோ அதையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பெண்கள் போதிப்பதை வேத வசனங்கள் தடை செய்திருப்பதால் பெண் போதகர்கள் தேவையில்லை.

**மைக்கில் எல். கிங்.**

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

ENGLISH The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

HINDI Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-11004.
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

TELUGU The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2: 5 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

TAMIL The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

MALAYALAM The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

KANNADA The Voice of Truth-Speaker : Robert Rathnaka
Box No 448, Bangalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

# WORLD VIDEO BIBLE SCHOOL

Applications are invited from committed young men who passed +2 (Graduates preferable) for Three year full-time Bible Course.

Write to us with Self-addressed envelope to application form.

For further details contact :

The Administrator
WORLD VIDEO BIBLE SCHOOL
P.O. Box 27
KANGAYAM – 638 701
TAMIL NADU.

TO

PRINTED MATTER

BOOK-POST

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No. 27 KANGAYAM-638 701

Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode.
Editor. E.Z.S. Rajanayagam